

# விடியும் பொழுதும் விலகிடும் இருளும்

ஏ.எம். கஸ்புள்ளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு

அனுமதிப்பத்திரம்

**புத்தகத்தின் பெயர்** விடியும் பொழுதும் விலகிடும் இருளும் **அனுமதிப் பத்திரம் இல.** EPAB/2/10936

**நூலாசிரியர்** ஏ.எம். கஸ்புள்ளா

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

**விஜித வெலகெதர**
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை

சபை

2017 நவம்பர் மாதம் 02

கல்வி அமைச்சு, இசுருபாயா, பத்தரமுல்ல

**அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் திகதி** 2022.11.01

நூலகங்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட நூலாகும்
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
NL/BRL/ 1188

கட்டையாறு வீதி
சின்னக் கிண்ணியா - 02
தொ: 077 4488441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியும் பொழுதும் விலகிடும் இருளும்

ஏ.எம். கஸ்புள்ளா

இயற் பெயர் அப்துல் மனாப் கஸ்புள்ளா - கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் சின்னக் கிண்ணியா றகுமானியாவை பிறப்பிடமாகவும், கட்டையாற்றை வசிப்பிடமாகவும் சேர்ந்த நான். தேசிய மட்டத்தில் கவிதையில் மூன்றாம் இடத்தையும் (1993), தேசிய இளைஞர் சேவை மன்றம் நடத்திய மாவட்டப் போட்டியில் கவிதையில் இரண்டாம் இடத்தையும் (1996) பெற்றுக் கொண்டேன். அண்ணல் சஞ்சிகையின் ஆசிரியரகவும் (2000), அதைத் தொடர்ந்து கற்க கசடற சிறுவர் கட்டுரை (2014), நெஞ்சினிலே கவிதை தொகுப்பு (2015), போன்ற நூல்களையும் எழுதியுள்ளேன். மேலும் பிரதேச மட்டத்திலான நூல் விவரணம், நாட்டார் பாடல்கள், சிறுவர் கதை, போன்றவற்றில் பிரதேச சான்றிதழ்களையும் (2015, 2016) பெற்றுக் கொண்டேன். விடியும் பொழுதும் விலகிடும் இருளும் (2016) என்பது எனது மூன்றாவது நூலாகும். தற்போது தமிழ் இலக்கியத்தில் அழகப்பா பல்கலைக்கழக இறுதி வருட மாணவனாக (வெளிவாரியாக) படிப்பை மேற்கொள்கிறேன்.

முகவரி:

ஏ.எம்.கஸ்புள்ளா
கட்டையாறு வீதி
சின்னிக் கிண்ணியா - 02
இலங்கை
077 4488441


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயாத்து முகம்மது அப்துல் மனாப்
தந்தைக்கும்
குப்பைத்தம்பி முகம்மது சரீபு பாத்திமா
(பாத்தும்மா) தாய்க்கும்
இந்நூல் சமர்ப்பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

**நூலின் பெயர் : விடியும் பொழுதும் விலகிடும் இருளும்**

நூலின் வகை : நாட்டார் இலக்கியம்
ஆசிரியர் : ஏ.எம். கஸ்புள்ளா
முகவரி : கட்டையாறு வீதி, சின்னக் கிண்ணியா - 2, இலங்கை
கைபேசி : 077 4488441
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
முதற் பதிப்பு : 2016.05.13
அட்டை, பக்க
வடிவமைப்பு : எம்.ஏ.எம். அஸ்மி, கிண்ணியா - 04, 075 7022680
அச்சுப் பதிப்பு : ஏ.ஜே.பிறின்ட், பழைய புகையிரத நிலைய வீதி, தெஹிவளை
பக்கம் : 68
தாள் அளவு : A5
விலை : 250/=
ச.த.நூ.இல : 978-955-4840-02-7

**Name of the book : Vidiyum Poluthum Vilahidum Erulum**

Tipe of Book : Folk Literature
Author : A.M. Kasbullah
Address : Kattaiyaru Street, Kinniya - 02, Sri Lanka
Mobile : 077 4488441
Copy right : Author
first Edition : 2016.05.13
Cover Designed &
Layout : M.A.M. Asmy, Kinniya - 04, 075 7022680
Printed by : AJ Print, Old Railway Station Road, Dehiwela
Pages : 68
Paper Size : A5
Price : 250/=
ISBN : 978-955-4840-02-7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா முதியோர் பெட்டகம்

அறிவுதான் மனிதனின் முதல் ஆயுதம். அறிவு ஆயுதமாகப் பயன்பட வேண்டுமென்றால் வரலாற்று ஆவணம் எமக்கு முக்கியம். முதலில், நமது வரலாறு நமக்குத் தெரிந்தால்தான் அதை பொதுச் சமூகத்துக்கு நகர்த்தவும், எங்களை நோக்கி வருகின்ற சவால்களை உடைத்து முன்னேறிச் செல்லவும் முடியும். எப்படி வேரறுந்த மரம் உயிர்த்துடிப்பற்றுப் போகிறதோ அவ்வாறுதான் வரலாற்ற சமூகம் நினைவிழந்த ஒரு ஜடப்பிண்டம் போலாகிறது.

எனவே, வரலாற்றுத் தொகுப்பு எமக்கு முக்கியமானது. இந்த வரலாற்றை எந்த உரை நடையிலும் வெளிப்படுத்தலாம். சங்க கால இலக்கியம் நமக்கு முன்னுதாரணப்படுவது போல், ஒரு வரலாற்றுச் சொல்கைக்கு நாட்டார் இலக்கியத்தின் பங்களிப்பும் அளப்பரிய இடத்தை வகிக்கிறது எனலாம். இளந்தலைமுறைக்கு வாய்மொழியாகக் கூறிய முன்னோரின் கதைகளும் பாடல்களும் உரைநடைகளும்தான் பின்னாட்களில் அந்தந்த சமுதாயத்தின் அசைக்க முடியாத வரலாற்றுத் திரட்டாகியது. இவர்களது அறிவிப்புகளில் புனைவுகள், வர்ணனைகள், எதிர்மறைகள், இடைச் செருகல்கள் காணப்படுவது தவிர்க்க முடியாததாக இருந்தாலும் அவற்றினூடாக அக்காலச் சூழவோட்டம் கற்றுத்தரும் சேதிகளை, சிந்திய ஒடுபாதைகளை எதிர்கால சந்ததிகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

நாட்டார் துறையியல் மிக விசாலமானது. நாட்டார் கதைகள், நாட்டார் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், சிறுவர் விளையாட்டு, சிறுவர் பாடல்கள், பொல்லடி, பொல்லடிப் பாடல்கள், பள்ளுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், சீனடி, சிலம்படி, வாழ்வீச்சு, கம்பு வீச்சு, நாட்டார் பழமொழிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் தொடர்கள், நாட்டார் விடுகதைகள், மண்வளச் சொற்கள், சடங்கு சம்பிரதாயங்கள் ... என்று ஏகப்பட்ட பிரிவுகள் நாட்டார் துறைக்குள் அடங்கும். நாட்டார் கவி என்ற பிரிவில் மட்டுமே நகைச்சுவைக் கவி, நையாண்டிக் கவி, தொழில் கவி, வாதுக் கவி, பிரார்த்தனைக் கவி, சத்தியக் கவி, தத்துவக் கவி, காதல் கவி, தூதுக் கவி ... என்று அதன் கிளை விசாலப் பரந்தது.

நாட்டுப்புற மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த இவை வெறும் பொழுதுபோக்குப் பாடல்கள் மட்டுமாகக் காணப்படவில்லை. அவர்களின் அன்றாட வாழ்வு எந்நிலைப் பட்டதோ அவ்வுணர்வு அப்படியே பாடலாக வெளிப்பட்டது. இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, சலிப்பு, களிப்பு, போசிப்பு முதலான வாழ்வு உட்கூறுகளின் யதார்த்த விம்பத்தைக் கூறுவதில் நாட்டார் பாடல்கள் பெரும் பாங்கைப் பெற்றிருந்தன. தமது நாளாந்த வாழ்வில் பேசுகின்ற பேச்சுக்கள் கவிகளாக வெளிப்பட்டன. இருந்த இடத்தில் கவி கட்டிப் படிக்கும் இலகுபுலமை கல்வியறிவு குறைந்த அன்றைய பாமர மக்களிடம் காணப்பட்டமை வியப்புக்குரியது தான்.

*அடிச்ச பகுசெங்க?*
*அட்டுவத்து நெல்லெங்க?*
*பிடிச்ச குடையெங்க?*
*நீங்க போறெதன்ன சுங்கானுக்கு?*

பாருங்கள், எவ்வளவு கருத்துச் செறிவுள்ள பாடலென்று. செல்வந்த நிலையிலிருக்கும் ஒருவர் எவ்வளவு ஆணவத்துடன் இருப்பார். அட்டுவம், பட்டறைகளில் தானியம் சேகரித்து வாழ்வின் அதிகோபுர அந்தஸ்தில் தொங்கிய ஒருவர், பின்னாளில் செல்வங்களை இழந்து இறுதியில் அத்தாங்குடன் மீன்பிடிக்கச் செல்லும் கீழ் நிலைக்குத் தள்ளப்படும்போது மற்றவர்கள் இவரை நையப்புடைப்பர்.

நாட்டார் இலக்கியத் தொகுதி வெளியீடுகள் வருடா வருடம் அதிகரித்துச் செல்கின்றபோதிலும் அத்துறையியல் முழுமை பெறவில்லை. ஊற்றெடுத்துப் பாய்கின்ற சிற்றருவிபோல் கிராமம் தோறும் அது வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கிராமம், ஊர் மண்ணுக்கென்றும் தனித்துவமான கலாசாரத்துடன் இங்கித பழக்கவழக்கங்களும் நலிவற்ற பண்பாட்டுகளும் காணப்படுகின்றன. அவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக நாட்டார் இலக்கியத்தைப் பார்க்க முடியும். அந்தவகையில், கிண்ணியா மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்துள்ள சில வாய்மொழிப் பாடல்களைத் தொகுத்து 'விடியும் பொழுதும் விலகிடும் இருளும்' எனும் தலைப்பில் வெளியீடு செய்து வைத்துள்ளார் சகோதரர் ஹஸ்புள்ளா.

'விடியும் பொழுதும் விலகிடும் இருளும்' என்ற இத்தொகுதியில் மீனவப் பாடல்கள், பல் சுவைப் பாடல்கள், ஊர் பழமொழிகள் பிரிவுத் துயர் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள், கிராமத்து சந்தைப் பாடல்கள், குழந்தைப் பாடல்களும் தாலாட்டுப் பாடல்களும், வயல் பாடல்கள், சோகப் பாடல்கள், ஓதிப் பார்க்கும் பாடல்கள், சந்தோஷத்தை வெளிப்படுத்தும் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், காதல் பாடல்கள், சேனைப் பாடல்கள் என்று 15 தலைப்புகளில் அந்த மண்ணுக்குச் சொந்தமான பாடல்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. உண்மையில், தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் வாசிப்போருக்கு மிகுந்த சுவாரஷ்யம், விறுவிறுப்பு ஏற்படுத் துவதைக் காண முடிகிறது.

'மீனவப் பாடல்கள்' எனும் தலைப்பில் கிண்ணியா மக்களின் ஜீவனோபாயத்தில் பங்களிப்புச் செய்துள்ள மீனவத் தொழில், அவர்களால் பிடிக்கப்பட்ட மீனினங்களின் பெயர்கள், 'தோனா கடற்கரை' குறித்த பதிவுகள் எதிர்காலச் சந்ததிகளின் கூர்மையான தேடலுக்கு ஒரு வேகத்தைக் கொடுக்கலாம்.

"கட்டு மரத்தில் போனவரே
கரச்சியில காத்திருக்கேன்
இரை தேடும் பறவைபோல
உன்னைப் பார்த்து நானிருக்கேன்"

தலைவியின் 'காத்திருப்பு' புலப்படுத்தப்படுகிறது. தொழில் விடயமாக வெளியேறிச் செல்லும் கணவனை வழியனுப்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதிலும் மாலை வருகையில் அவனை எதிர்கொள்வதிலும் அக்காலப் பெண்ணின் பிறழ்வற்ற ஒழுக்கச் செழுமைக்கு தனிச் சுவையுண்டு. அவளது வெட்கம், நாணம் ஆகிய இரு விடயங்கள் பற்றி மட்டும் நீண்ட பக்கங்களில் ஒரு தனி நூலே எழுதிவிடலாம். கிராமப் பெண்ணின் ஒழுக்கப் பண்பு வெளிப்பாட்டை கஸ்புள்ளா இந்நூலில் ஆழப் பதிவு செய்திருக்கிறார்.

'கட்டு மரம்' என்பது, இலங்கை முஸ்லிம் தந்தையரான அரேபியர் வரலாற்றுடன் தொடர்புபட்டுள்ள கட்டு மரக் கப்பலையும் 'கரச்சி' என்பது, அவர்கள் அக்கப்பலிலிருந்து வெளிநாட்டுப் பொருட்களை இறக்கி, அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றியனுப்ப உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டு சென்று, அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்த இடத்தின் பெயரையும் குறிப்பன. இந்த வரலாற்றுப் பதிவு பல ஆய்வு நூல்களில் பதிவாகியிருந்தாலும் கிண்ணியா மக்களுடன் தொடர்புற்றுள்ள பாடலொன்றும் வெளிக்கிளம்புவது வரலாற்றில் புதிய பதிவென்றுக்கு நம்மையெல்லாம் இட்டுச் செல்கிறது.

"...குடத்திலே நீரில்லை
என் நெஞ்சினிலே
இனி சுமையில்லை"

'பல சுவையான பாடல்கள்' என்ற தலைப்பில் காதல் இழையோடும் பாடல்களில் இதுவுமொன்று. காதலில் தோல்வியுற்றோர் "காதலுக்கு கண்ணில்லை" என்று பாடுவர். ஆனால், இங்கு தலைவி விடும் கண்ஜாடை வேறுவிதப்பட்டது. காதல் வலையில் சிக்கி, கனவிலும் பொழுதிலும் சதா அவள் நினைவிலே கிடந்து உயிரை மாய்க்கும் தலைவனுக்கு தலைவி காட்டும் பச்சைக் கொடி இது. உண்மையில், சுவாரஷ்யமான சம்பாசனை, வாசிப்பின் முழு ஆர்வத்தையும் இத்தொகுதிப் பாடல்கள் தூண்டி விடுகின்றன.

சிறுவர் உலகம் மிக விசித்திரமானது. வீடு, பாடசாலை, அயல வர்கள், நண்பர்கள் ஆகிய நான்கும் சேர்ந்தவைதான் அவர்களின் உலகம். விளையாட்டுத் திடலில் ஆடிப்பாடி, இன்புற்று மகிழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தில் நீந்தும் இவர்கள், சிறுவர்-சிறுமி என்ற பாகு பாடின்றி, ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பாலகர் போல் கதை கூறி ஆனந்தக் கடலில் மிதப்பர். 'விளையாட்டுப் பாடல்கள்' என்ற தலைப்பில் வரும் பாடல்கள் இளவேனிற் காலத்திற்கே நம்மை ஒரு கணத்தில் அழைத்துச் செல்லும்.

"தத்தித் தத்தி நடந்து வா
தங்க மகனே நடந்து வா
முத்துப் பல்லே நடந்து வா
குலத்தின் ஒளியே நடந்து வா"

தாலாட்டுப் பாடல்களின் செல்வாக்கும் அதற்குரிய இடத்தை வகிக்காமலில்லை.

வயற் காட்டில் பாடப்படும் பாடல்களுக்கும் ஈர்ப்பு சக்தி அதிகம்தான். வாதுக்கு கவி பாடும் களமாக வயற் காடு திகழ்ந்தி ருக்கிறது. உழவு, நாற்று நடல், களை பிடுங்குதல், பன்றிக் காவல், குருவிக் காவல், அறுவடை என்று வயற் காலப் பருவம் ஓர் அலாதியான இன்பம். வயல் வேலைகளின்போது களை நீங்கி உற்சாகம் கிழர்ந்தெழ ஆண்களும் பெண்களும் மாறி மாறி வாதுக்கு கவி பாடுவர். இதனால் தாங்கள் செய்கின்ற வேலைகளின் கடினம் நீங்கப் பெற்றனர்.

வாதுக் கவி, படிப்போருக்கும் கேட்போருக்கும் விறு விறுப் பாயிருக்கும். இராக் காலங்களில் லாம்பு வெளிச்சத்தில் பன்றிக் காவல் புரிவோர் தத்தமது வாடிகளில் அமர்ந்திருந்து எதிர்ப் பாட்டுப்பாடுவர். இந்த அனுபவத்தை கஸ்புள்ளா 'வயல் பாடல்கள்' என்ற தலைப்பின் மூலம் நினைவுக்குக் கொண்டு வருகிறார்.

"தண்ணீரை ஓதிக் கழுவிவிட்டால்
தடிப்பு கொறஞ்சிவிடும்
கண்ணியமான மௌலவியிடம்
கை படாம கொண்டு போங்க"

'ஓதிப் பார்க்கும் பாடல்கள்' நமது பாரம்பரியத்தின் ஈரலிப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டை தீட்டும். இதுபோன்ற சம்பிரதாய கிரியைகளுக்கு மார்க்கத்தில் பத்வாக்கள் இருந்தாலும் நமது இருப்பின் சாரலுக்கு இவை பக்கவேர்களாகும்.

'விடியும் பொழுதும் விலகிடும் இருளும்' என்ற கஸ்புள்ளா வின் இத்தொகுதி நாட்டார் இலக்கியத்தின் ஒரு பகுதியை மட்டுமே நமக்குத் தந்துள்ளது. இதுபோன்று ஏனைய பகுதி களையும் தொகுப்பது பற்றிய சிந்தனையை அவர் எதிர்காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என்ற உந்துதலையும் இதன் மூலம் எத்தி வைப்போம்.

அதேபோன்று, கிண்ணியாவின் வரலாற்றுத் தொகுப்பும் மிக முக்கியமாகும். அது இப்பிரதேசத்துக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த இலங்கை முஸ்லிம்களுக்கும் ஆற்றும் மிகப் பெரும் பணியாகும். ஏனென்றால், இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கு கிராமங்கள் மற்றும் ஊர்களின் வரலாறுகள், கிராமிய பண்பாட்டு வாழ்க்கையில் எழுத்தாளர்களாகவும் கலைஞர்களாகவும் பங்காற்றியவர்களின் வரலாறுகள், நமது மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கட்டடங்கள் மற்றும் புராதனப் பொருட்கள் என்பவற்றின் புகைப்பட ஆவணங்களும் தொகுப்புகளும் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.

ஒரு கட்டத்தில் கவிப் பேரரசு வைரமுத்து இப்படிச் சொல்கிறார்: "இந்த சமுதாயத்தில்தானே வாழப்போகிறாய்? இந்த சமுதாயத்தின் வேர்களைப் பற்றியும் விசாரித்து அறிந்து கொள். அஸ்திவாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளாமல் வெறும் கட்டடங்களை மட்டும் ரசித்துக் கொண்டிராதே."

வயது முதிர்ந்த ஒருவர் மரணிக்கிறார் என்றால் நூலக மொன்று அழிக்கப்படுகிறது என்பதுதான் பொருள். அவர்களது நூலகப் பெட்டகங்கள் காக்கப்பட வேண்டுமானால் கள ஆய்வொன்று கண்டிப்பாகத் தேவை. அப்போதுதான் அது சாத்தியப்படும். கள ஆய்வென்பது சர்வ சாதாரண விடயமா? அதற்குப் பின்னாலுள்ள வலிகளும் வேதனைகளும் சொல்லில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளாதவை. சிரமங்களை தலைமேற் கொண்டு, இப்பிரதேசத்தி லுள்ள வயது முதிர்ந்தவர்களை தேடிச் சென்று பாடல்களைத் திரட்டி, இப்படியொரு தொகுதியைப் பதிவு செய்தமை மூலம் ஹஸ்புள்ளா பலரது நூலகப் பெட்டகங்களைப் பாதுகாக்க முயற்சித்திருப்பது மெச்சத்தக்கதாகும். இதுபோன்று பல நூல்களை வெளியிட அல்லாஹ் அவரின் சிந்தனைகளையும் ஆற்றல்களையும் விரிவுபடுத்த வேண்டும், வாழ்த்துக்கள்.

**லரீப் சுலைமான்,**
**ஆசிரியர் எங்கள் தேசம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய இலக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும்

மக்கள் தமது அன்றாட வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை, வாய்மொழி மூலமாக பாடப்படும் பாடல்களை கிராமியப் பாடல்கள் அல்லது நாட்டார் பாடல்கள் அல்லது கிராமிய கவிதைகள் எனவும் அழைப்பதுண்டு. இலக்கியங்களில் காவியங் கள், பிரபந்தங்கள் செய்யுள் வடிவில் இருப்பதால் அவை படித்தவர்கள் மட்டுமே விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால், நாட்டார் பாடல்கள் படித்தவர்கள் தொடக்கம் பாமர மக்கள் என அனைவரும் விளங்கிக் கொள்ளலாம். அந்த வகையில் விவசாய வளமும், கடல் வளமும் கொண்ட எமது கிண்ணியா மண்ணில் இவ்வாறான பாடல்கள் பாடியவர்களின் மறைவானது எமது மண்ணுக்கு பேரிழப்பாக அமைந்தது.

மேலும், அவர்கள் வாய்மொழி மூலமாகப் பாடிய பாடல்கள் எழுத்து வடிவம் பெறாத காரணத்தாலும் காலத்தால் அவை அழிந்து போய்விட்டன. இக்காலத்தில் அப்பாடல்களின் முக்கியத்துவத்தை நாம் அறிய வேண்டிய தேவை உருவாகி யுள்ளது. அவ்வாறான வாய்மொழிப் பாடல்கள் கிண்ணியா மண்ணில் பாடியவர்களின் பாடல்களை தேடிய போது 'பாட்டு முத்தலி மற்றும் ஏ.ஆர். அப்துல் மனாப் என்பவர்களால் பாடப்பட்ட சில பாடல்களை எனக்கு ஓய்வு பெற்ற கிண்ணியா ஜாயா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.ஐ.எம். முஸ்தபா மற்றும் எம்.எல்.எம். நளீப் ஆசிரியர் போன்றவர்கள் தந்துதவினார்கள்.

மேலும், சிதைவடைந்த சில பாடல்களை முழுமைபடுத்தி எழுதியுள்ளேன். இதனால் எம் கிண்ணியா மண்ணில் பாடப்பட்ட வாய்மொழிப் பாடலான நாட்டார் பாடல்கள் ஓர் ஆவணமாக அமைய வேண்டும் என்ற எனது நோக்கமும் நாட்டார் பாடல்களில் கொண்ட பற்றும் 'விடியும் பொழுதும் விலகிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளும்' எனும் நூலாக தொகுத்து தந்திருக்கின்றேன். இக்கிராமிய கவிதைகளை பாடலாகப் பாடுவதன் மூலம் அதன் சுவையினையும், நயத்தையும் மற்றவர்களும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். கிராம மக்களின் உள்ளத் துடிப்புக்களையும் உணர்ச்சிப் பெருக்குகளையும் நாட்டார் பாடல்களில் காணலாம். இப்பாடல்களின் வரைவிலக்கணம் பற்றி 'ஸ்ரீபன் பியுக்ஸ்' என்பவர் 'நாகரிக வளர்ச்சி பெற்ற மக்களிடையே எச்சசொச்சங்களாக நிலவும் பண்டைய நம்பிக் கைள், பழக்கவழக்கங்கள் பற்றிய அறிவியலே நாட்டார் வழக்கா கும் என கூறுகின்றார். நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், கட்டுக்கதைகள், நாட்டார் இசை, நாட்டார் நடனம். ஐதிகங்கள், பழமொழிகள், விடுகதைகள், ஆகியவற்றுடன் கூத்தும் நாட்டார் வழக்கு என்னும் இத்துறையைச் சார்ந்தவையாகும் என வகைப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான நாட்டார் பாடல்கள் கிராம மக்களின் வாழ்க்கை யோடு ஒன்றாக கலந்துள்ளன. இதனாலேயே நாட்டார் பாடல்கள் கிராமிய கவிதைகள் அல்லது பாடல்கள் என்றும் பெயர் பெறுகின்றது. 'விடியும் பொழுதும் விலகிடும் இருளும்' என்ற இந்நூலினைப் படிக்கின்ற ஒவ்வொருவரின் உள்ளத்திலும் கிரா மத்தின்வாழ்வியலைவாழ்வதற்கான ஆசையை உருவாக்குவதோடு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை எமக்கு கோடிட்டுக் காட்டக் கூடியதாக இக்கிராமியக் கவிதைகள் அமையும் என்பது எனது எண்ணமாகும்.

கிராமிய வாழ்க்கையானது கிடைப்பதைக் கொண்டு திருப்திப் படுகின்ற ஒரு வாழ்க்கையாகும். விட்டுக்கொடுத்தல், உதவி செய்வதில் முந்திக்கொள்ளுதல், கள்ளம் கபடமற்ற உள்ளம், முகத்திற்கு நேரே பேசும் தன்மை, தன்னம்பிக்கை, மனவுறுதி போன்ற நல்ல பண்புகள் அவர்களிடம் இயற்கையிலேயே கூடப் பிறந்ததாகும். நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளமாக உள்ளன. எனவேதான் **'நாட்டுப் பாடல்கள் இறவாமற் பாதுகாப்பது எல்லோருடைய**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடமையாகும்'** என்ற **பேராசிரியர் சு. வித்தியானந்தன்** அவர்களின் கருத்திற்கேற்ப எனது கிராமத்தின் வாய்மொழிப் பாடல்களான கிராமியக் கவிதைகளை எழுத்தில் வடித்து அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற ஆசையோடு இந்நூலை தயார் செய்துள்ளேன்.

மேலும், இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள எங்கள் தேசம் பத்திரிகை ஆசிரியர் லரீப் சுலைமான் அவர்களுக்கும், அட்டைப்பட அறிமுகக் குறிப்புகளை தந்த கலாபூஷணம் பீ,ரீ. அஸீஸ் அவர்களுக்கும், இந்நூலை வடிவமைப்புச் செய்த எம்.ஏ.எம். அஸ்மி அவர்களுக்கும், அச்சிட்ட ஏ.ஜே பிரின்ட், தெஹிவளை அச்சகத்தார்க்கும், ஆலோசனைகள் தந்தவர்களுக்கும் என் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் நன்றிகளை மறவாது தெரிவிக்கின்றேன்.

என்றும் அன்புடன்

**ஏ.எம். கஸ்புள்ளா**
**கட்டையாறு வீதி**
**கிண்ணியா- 02**
**இலங்கை**
**+ 94 77 44 88 44 1**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம் பக்கம்

| | |
|---|---|
| 01. மீனவப் பாடல்கள் | 17 |
| 02. பல் சுவைப் பாடல்கள் | 20 |
| 03. பிரிவுத் துயர் பற்றிய பாடல்கள் | 29 |
| 04. விளையாட்டுப் பாடல்கள் | 32 |
| 05. நகைச்சுவைப் பாடல்கள் | 35 |
| 06. கிராமத்துச் சந்தைப் பாடல்கள் | 36 |
| 07. தாலாட்டுப் பாடல்கள் மற்றும் குழந்தைப் பாடல்கள் | 39 |
| 08. வயல் பாடல்கள் | 44 |
| 09. சோகப் பாடல்கள் | 49 |
| 10. ஓதிப் பார்க்கும் பாடல்கள் | 52 |
| 11. சந்தோஷத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் | 54 |
| 12. ஒப்பாரிப் பாடல்கள் | 56 |
| 13. (உள்ளத்தின் விருப்புக்களை வெளிப்படுத்தும்) காதல் பாடல்கள் | 58 |
| 14. சேனைப் பாடல்கள் | 63 |
| 15. ஊர் பழமொழிகள் | 67 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியும் பொழுதும் விலகிடும் இருளும்

(கிராமிய கவிதைகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01**

## மீனவப் பாடல்கள்

இலங்கையின் ஏனைய பிரதேசங்களைப் போன்று கடல் வளம் பொருந்தப் பெற்ற கிழக்கு மாகாணத்தின் கிராமிய பாடல்களின் செல்வாக்கு மிகைந்து கிண்ணியாவிலும் காணப்பட்டது. மீனவர்கள் மீன் பிடிக்கும் போது எல்லோரும் ஒன்றாக இணைந்து உற்சாகமாகப் பாடல்களைப் பாடுவதோடு, பாடல்களைப் பாடுவதன் மூலம் மற்றவர்களுக்கும் சுறுசுறுப்பை உண்டாக்குவார்கள். இவ்வாறு செய்வதால் தமது வேலைகளை இலகுவாக்கிக் கொள் வார்கள்.

அதுபோலவே மீன் பிடிக்கும் போதும், மீன்களை விற்பனை செய்கின்ற போதும் பாடல்களைப் பாடுவார்கள். அவ்வாறான தொரு சந்தர்ப்பத்தில் பாடப்பெறுகின்ற பாடலாக இக்கிராமியக் கவிதை அமைவதைக் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீன் பிடிக்கும் பாடல்

கடலிலே மீனிருக்கு
கரைக்கு வந்தா காசிருக்கு
வெள்ளாப்பு வெளிச்சத்திலே
வலை விடுவோம் ஏலேலோ

கலங்காம கடலிருக்கு
காற்று மெல்ல அடிச்சிருக்கு
சல சலக்குதே மீனெல்லாம்
புறப்படுவோம் ஏலேலோ!

### மீன் விற்பவர் பாடும் பாடல்

மீனு நல்ல மீனு
தோனாக் கடலு மீனு
நானா பிடித்த மீனு
பேரைச் சொல்லி கேளுங்க
கொறஞ்ச காசிதான்
மீனு வந்து வாங்குங்க!

கெலிச்சலும் முரலும்
கெழுத்தியும் திருக்கையும்
பாறையும் சூரையும்
ஒட்டியும் ஒராவும்
பார்த்து பார்த்து வாங்குங்க
இது ஆத்து மீனு தானுங்க
மீனு நல்ல மீனுங்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்னோடு கடலுக்குச் செல்லும் மீனவத் தோழனை எழுப்பும் பாடல்**

வெள்ளம் ஏறுதே இது
நல்ல நேரம்தான்
கடலில் உள்ள மீனெல்லாம்
ஒன்னு சேருமே

வா வா தோழா
வள்ளத்தை தள்ளுவோம்
மனம் கொண்டு
கடலுக்குச் செல்லுவோம்
மீனின் தோழனே எழும்பிடு
ஓஹோ ஹோ எழும்பிடு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02**

## *பல் சுவையான பாடல்கள்*

வாழ்வின் பல்வேறு தருணங்களில் கிராமிய மக்கள் பல்வேறு பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். அவ்வாறு பாடுவது அப்போதைய வழக்கமாக இருந்தது. அவ்வாறு பாடும் போது அவர்களது மனதில் நிலை கொண்டுள்ள துயரங்கள் அத்தனையும் மெல்ல குறைந்து மனதில் சந்தோஷங்களை நிறையச் செய்வதற்காக பாடல்கள் பாடப்பட்டன. அப்பாடல்கள் பிறருக்கு சுவாரஷ்யத்தையும், அறிவுரைகளையும் சொல்வதாக அமைந்தன.

அப்பேற்பட்ட தன்மையும், வசீகரமும் கிராமியப் பாடல்களில் பொதிந்திருந்தமை கிராமியப் பாடல்களில் காணப்படும் விசேட தன்மையாகும். கிராமியப் பாடல்கள் முழுவதும் எளிமையான சொற்களின் கையாடல்களுடன் இலகுவாகப் பாடப் பெற்றவையாகும். அவை படித்தோருக்கு மாத்திர மன்றி, பாமர மக்களும் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையான பேச்சுத் தமிழில் இனிமையாகப் பாடப் பெற்றவையாகும்.

பருவகாலங்களில் பருவங்களுக்கேற்ப காற்று வீசுவது வழமையாகும். அவ்வாறு பருவங்களுக்கேற்ப காற்று வீசும் போது நிகழ்கின்ற நிகழ்வுகளையும், மக்களின் மனங்களில் தோன்றுகின்ற உணர்வுகளையும் குறித்து பாடப்பட்ட பாடலை கீழே காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றுப் பாடல

கச்சான் காத்து அடிக்குதே
காட்டு மரம் சாயுதே
குட்டை பாவாடை பறக்குதே
பெண்டுகளா
அதை மூடிக் கொண்டு கொஞ்சம்
போவீங்களா...!



பட்டமொன்று பறக்குதே
பாதி வழியில் துடிக்குதே
விட்டவன் மனசு அழுகுதே
பட்டு நூலும் அறுந்ததே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதே போன்று, வீட்டில் இருக்கும் பெண்கள் தமது கணவனுக்காகவோ, மாமா, மச்சான், வாப்பா, தம்பி, அண்ணன் போன்றோருக்காகவோ காத்திருக்கும் நிலை தற்போதைய நகரத்தில் மாத்திரமன்றி கிராமத்திலும் இருப்பது வழமையான விடய மாகும். அவ்வாறு வீட்டை விட்டு வெளியேறிச் சென்ற தனது மச்சானுக்காக உணவு சமைத்து வைத்து காத்திருக்கும் பெண்ணொருத்தியின் மனோநிலையையும் அவள் தனது மச்சானை சீக்கிரமாக வீட்டுக்குத் திரும்பாமல் இருப்பதால் அவளுடைய கோபம் வெளிப்படும் விதத்தையும் பின்வரும் பாடல் எடுத்துரைக் கிறது.

*கருவாடு கமகமக்க*
*முருங்கைக் கீரை சுண்டலுடன்*
*சமைச்சிருக்கேன் மச்சானுக்கு*
*சட்டியை முட்டியை உருட்டாதே*
*சனியன் நீ ஓடிடு*
*தும்புத் தடி என் கையிலே - நீ*
*அடிவாங்கப் போறா*
*உன் மெய்யிலே!!!*

***உசிர பறிச்சி விட்டாய்***

*ஓலைக் குடிசை*
*ஒசத்தி இல்லன்னா*
*காலைக் கிளப்பி விட்டாய்*
*கன்னி நீ*
*காலைக் கிளப்பி விட்டாய்*
*உன்னைப் பெற்றதற்கு*
*உசிர பறிச்சி விட்டாய் - என்*
*உசிர பறிச்சி விட்டாய்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ அக்காலத்து கிராமப் பெண்கள் பூப்படையும் போது அதற்காக விழாக்கள் கொண்டாடுவது வழக்கம். 'பூப்படைதல்' என்பதை கிராமிய வழக்கின் படி 'வயதுக்கு வருதல்' என்றும் சொல்வார்கள். அதற்காக எத்தனையோ சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கிராமப்புற மக்கள் பின்பற்றி வந்தனர்.

அவ்வாறு கிராமத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தேறுகிறது. தனது மாமியின் மகள் பூப்பெய்வதை பெண்ணின் மச்சான் அறிந்து கொள்கிறான். மேலும் அளவில்லா ஆனந்தம் கொண்ட அவன் அத்தகைய தருணத்தை அவளுடன் பேசிக் கழிக்க விரும்புகிறான். அது பற்றிய பாடல்.

### முகம் காட்டு புள்ளே

*மாமி மகளு சமஞ்சிருக்கா*
*பக்கம் வரவே ஒழிஞ்சிருக்கா*
*செக்கச் சிவந்து போயிருக்கா*
*சிந்தனை முளுக்க அவ நெறஞ்சிருக்கா*
*வந்திருக்கும் மச்சானுக்கு*
*வந்து உன் முகம் காட்ட*
*தவிக்கிறியோ ? தயங்கிறியோ?*
*கொஞ்சம் நில்லு புள்ள - ஒன்னெ*
*கொஞ்சிடவா சொல்லு புள்ள*

☯ அப்படியான ஒரு தருணத்தில் மண் குடத்தை ஏந்திக் கொண்டு சென்ற அவனது காதலியான குறித்த பெண் வரப்பின் மீது நடக்கையில் வீழ்ந்து விட்டால் தனது மனம் பதை பதைத்துப் போய்விடும் என்பதால் அவள் விழாமல் பக்குவமாக நடக்க வேண்டும் என இவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறான். அதாவது, அவள் மீது அளவு கடந்த காதல் கொண்ட இவனுடைய மன எண்ணம் பின்வரும் பாடலாக அமையப் பெற்றுள்ளதைக் காணலாம்.

**நெஞ்சில் சுமையில்லை**

இடுப்பிலே மண்கொடம்
இடுக்கிக் கிட்டு போறவளே
வரப்பிலே தடுப்பு இருக்கு
வயல் நெறய நீரிருக்கு
பார்த்துக் கொஞ்சம் போ புள்ளே

பார்த்து நான் போவாட்டி
சேர்த்திலே நீர் எறங்கி
செல்லும் வழி காட்டுவாயா
மச்சானே
நான் செல்லும் வழி காட்டுவாயா
மச்சானே

ஆசையை மனசுக்குள்ளே
அடக்கி வெச்ச மச்சானே
உன் பாசம் அறிந்தேனே
பயப் படாதே!
குடத்திலே நீரில்லை
என் நெஞ்சினிலே
இனி சுமையில்லை!

☯ வாய்க்குச் சுவையாக சமைத்து கணவன் அதை வயிறார உண்டு அவன் சமையல் ரசனை பற்றிக் கூறக்கேட்ட மனைவி சந்தோஷம் அடைகிற நிகழ்வுகள் கிராமங்களில் காணப்படுகின்ற வழமையாகும். இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனுக்கு மனைவி சாப்பாடு பரிமாறக்கூட நேரமில்லாமல் போய்விட்டது. அதிகமானவர்கள் கடைச்சாப்பாட்டு பிரியர்களாக மாறிவிட்டார்கள். கிராமத்தில் பெண்கள் தமது கணவர்களை உபசரிக்கும் நிகழ்வை காட்டும் பாடல் இதுவாகும்.

### உணவு உண்ண அழைத்தல்

*அகத்தி கீரை ஆக்கியிருக்கேன்*
*கெளுத்தி மீனு வறுத்திருக்கேன்*
*அத்தி மரத்தில் பந்தலிட்டு*
*மாமி மக நான் பார்த்திருக்கேன்*
*இந்த நேரம் எங்கு போனீரோ*
*வந்து உண்டு பாருங்களேன்*
*சுவையை கொஞ்சம் கூறுங்களேன்!*

கணவன் மனைவிக் காதல் அது இன்பமானது. கணவன் எங்கு போனாலும் வீட்டுக்கு நேரத்திற்கு வரவேண்டும் என்று எதிபார்ப்பது மனைவியின் விருப்பமாகும். அதனை வெளிப்படுத்தும் பாடல் இது.

### நேரத்திற்கு வருவேன்

*தோட்டத்திலே தொட்ட வேல*
*பாதியில கிடக்குதடி*
*பாட்டன் வழி தொழிலடி*
*பார்த்து வாரன் பொறுத்திடடி!*

*பொறுக்கும் மனசு*
*பொம்புளைக்கு நெறயத்தான் மச்சானே!*
*இருட்டு படவே வருவீங்களா?*
*இவளின் மனச அறிவீங்களா?*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனச அறிஞ்சே மாலயிட்டன்*
*மாலை முன்னே வந்திடுவேன்*
*விளக்கு கொழுத்தும் நேரம் பார்த்து*
*வீட்டுப் படியில் நானிருப்பேன்!*

☯ எந்தப் பெண்ணும் தான் விரும்பியவனுடன் வாழவே விரும்புவாள். அந்த வகையில் கிராமப்புற பெண்களும் விதிவிலக்கல்ல. தனது காதல் விருப்பத்தை அவள் மச்சானிடம் சொல்லுவதைப் பின்வரும் பாடல் வெளிக்காட்டுகிறது.

***மறவாதே!***

*ஆத்துப் பக்கம் வாங்க - இந்த*
*ஆசைக்கிளிய பாருங்க*
*நேத்து முதல் காத்திருக்கேன்*
*நெருங்கி நீங்க வாருங்க*

*பார்த்து பார்த்து நின்றதிலே*
*பூத்துப் போச்சு கண்களெல்லாம்*
*சேத்து வெச்ச ஆசையெல்லாம்*
*செதறிப் போச்சு மனசுக்குள்ளே*

*காலங் கடந்து போனாக்கா - நம்ம*
*கலியாணம் நிறைவேறுமா*
*நாளும் தெரிஞ்ச மச்சானே - என்னெ*
*ஏத்துக்கிட்டுப் போவியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவுகாத்த கிளியாக
இருக்க நீயும் விரும்பாதே
அழகு மயில் உனக்காக
காத்திருக்கேன் மறவாதே!

☯ கொக்கு பிடித்து வருவதாகச் சொல்லி காடு, குளம் என்று போய் கொக்கு கிடைக்காததால் மீனைக் கொண்டு வந்து சமைத்துத் தருமாறு நகைச்சுவையாக மனைவியிடம் கணவன் சொல்வதாக அமைந்த பாடல் இது.



**போங்க மச்சான்**

கொக்கு ஒன்றயும் காணலய
கொளத்து மீனே
கொண்டு வந்தேன்
கொழம்பு வைத்துத் தாடி புள்ள

ஒறப்ப கொஞ்சம்
கூட்டிக் கொள்ளு
கொறுக்கா புளியும்
சேர்த்துக் கொள்ளு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கணக்கா
செய்து விட்டேன்
உண்ணும் நேரம்
வாங்க மச்சான்
இப்ப எனனை விட்டு
போங்க மச்சான்!

☯ கிண்ணியாவில் வாழும் முஸ்லிம்கள் அவரகளின் சிறு பிள்ளைகளுக்கு சிறு வயதில் கத்னா எனும் நபி வழியை பின்பற்றி செய்கின்ற (சுன்னத்தை) உறவினர்களுக்குச் சொல்லி விழாவெடுத்து சந்தோஷமாக செய்வார்கள் அப்படியான ஒரு நிகழ்வை சித்தரிக்கும் கிராமத்துப் பாடல்.

**கத்னா வைபவம்**

அன்பும் அருளும்
ஆற்றல் மிகுந்த செல்வங்களாம்
லெத்திபு சாரா தம்பதிகளின்
செல்வம் மிகுந்த
புத்திரரே!

நவ்பரும் நளீபும்
நபிலுடனே
கத்னா வைபவம்
நடக்கிறதே!

சீனவெடி வானவெடி
வீதியெல்லாம் கேட்கிறதே
வாழத்துப்பாட. பாவாவின்
றப்பான் இசை மொழங்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03**

## பிரிவுத் துயர் பாடல்கள்

பிரிவு என்பது மனதை விட்டும் நீங்காத ஒன்றாகும். அதை, எவராலும் சரி செய்வது இலகுவான காரியமல்ல. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மனைவியைப் பிரிந்துள்ள கணவன் அவளை எண்ணிப் பாடுதலை பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

### *பறந்து வா கிளியே!*

*மச்சி மச்சி*
*நீ மா மரத்துப் பட்சி பட்சி*
*கொச்சிக்காய் சிவப்பே*
*கோவம் பழ இனிப்பே*

*உள்ளத்திலே உறக்கமில்ல*
*உதிக்கும் பொழுது வெளங்கவில்ல*
*உன்னப் பிரிஞ்சி நாளாச்சே*
*பாலை வனமாய்*
*மனம்*
*மாறிடிச்சே!*
*பறந்து வா என் பசுங்கிளியே!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ மேலே கணவன் மனைவியைப் பிரிந்து கிராமத்தில் உட்கார்ந்து புலம்பியதைப் போலவே, கணவனைப் பிரிந்து வாழும் மனைவியும் பல சொல்ல முடியாத துன்பங்களை வெளிப்படுத்தும் பாடல்.

### சோகத்தில் மிதக்கிறேன்

கடலு கடந்து போனவரே
கண்ணு படாத தூரமானவரே
உடலு சுகம் எப்படியோ
மடல் போட்டு கேட்டிடவே
மச்சி இவள் படிக்கலயே

பாலை வெயிலு கூடத்தானோ
வந்து போனவர் சொல்லயிலே
வெந்து போகுது
எந்தன் மனசு !

காசி எனக்கு பெரிசில்ல
காத்துக் கொள்ளுங்க
உடம்ப மச்சானே!
நீங்க போயி
பல வருசம் ஓடிடிச்சே!

உங்களை பிரிஞ்சி வாழும்
வாழ்க்கையிலே
உடஞ்சி போனது என் மனசு

தெரிஞ்சி கொண்டு - என்னைத்
தேடி வந்திடுங்க மச்சானே!
சொல்ல முடியாமல் தவிக்கிறேன்.
சோகத்தில் மிதக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற கணவன் வருகின்ற நேரமதனை எதிர்பார்த்து கடலின் அருகே வந்து அவன் அன்பிற்கு ஏங்கித் தவிப்பதை மனைவி பாடுவதாக அமையும் பாடல்

**பயந்து போனேன்**

கட்டு மரத்தில் போனவரே
கரச்சயில காத்திருக்கேன்
இரை தேடும் பறவைபோல
உன்னைப் பார்த்து நானிருக்கேன்

அலைகள் வந்து போகுது
காலைத் தழுவிச் செல்லுது
வலையில் பட்ட மீனாக
எந்தன் மனசு துடிக்குது

தூர வரும் படகினிலே - ஒன்னெ
துருவி மனம் தேடுது
யாரைக் கேட்டு நான் பார்ப்பேன்
யாது கெட்டுப் போனேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

## விளையாட்டுப் பாடல்கள்



சிறுவர்களின் பொழுதுபோக்கு என்றால் அது பெரும்பாலும் விளையாட்டே தவிர வேறு எதுவும் கிடையாது. சிறு பருவம் முதலே கிராமத்துப் புழுதி மண்ணில் உருண்டு புரண்டு விளையாடும் இவர்கள் மண்ணோடு நெருக்கமாக உறவாடியவர்களாவர்.

கிராமிய சூழலைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே தமது வாழ்வைப் பெரும்பாலும் ஆக்கிக் கொண்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ இலக்கங்களின் எண்ணிக்கையை சிறுவர்கள் விளையாடிப் பாடும் பாடல்.

இலக்கங்களின் எண்ணிக்கையை வைத்து சிறுவர்கள் விளையாட்டுக்களை அமைத்து விளையாடினர். கிராமிய விளையாட்டுக்களிலும் கல்வியை இலகுவாக சிறார்களின் மனதில் பதியமிடச் செய்வதற்கான வழி வகைகளை மூத்தோர்கள் செய்துள்ளனர் என்பதையே பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

*ஒன்று ரெண்டு மூணு*
*ஓடி வந்து பாரு*
*நாலு அஞ்சி ஆறு*
*நாங்க சொன்னா கேளு*
*ஏழு எட்டு ஒன்பது*
*ஏன் வராமல் நிற்பது*
*பத்து நூறு ஆயிரம்*
*பறந்து வாடி சீக்கிரம்!*

***சிறுவர்கள் ஓடி ஒளிந்து விளையாடும் பாடல்***

சங்கிலி புங்கிலி
கதவைத் திற
நான் மாட்டேன்
தேங்காப் புலி
பசு மாட்டை கண்டியா
ஓ...?
எங்கெருச்சி
வீட்டுக்குள்ளே
விடு வியா?
விட மாட்டியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுவர்களில் ஒருவர் கைகளை விரித்து மற்றவர் அதில் குத்தி விளையாடிப் பாடும் பாடல்.

பார்த்தேன் குத்து
பறயன் குத்து
புளியங் குத்து
புடிச்சேன் குத்து

- ஒருவருக்குப் பின்னால் ஒருவர் இடுப்பை வரிசையாக பிடித்திருக்க இன்னொருவன் வந்து பாடும் பாடல்

காக்கைக்கும் குருவிக்கும்
கலியாணமாம்
கந்தூரி மாசம் புலியாணமாம்
ஓட்டை வீடும் சீதனமாம
முத்தலாய்ப் பார்த்து
அப்பா ஒரு பூசணிக்காய் தரட்டாம்
சுண்டிப் பார்த்து
எடுத்துச் செல்லுங்க

- இரு சிறுவர்களில் ஒருவர் கையை நிலத்தில் விரிக்க மற்றவர் கையைத் தொட்டுப் பாடும் பாடல்

தக்காளி தக்காளி
நாவக்கா
கருமத் தக்காளி
நாவக்கா
கப்பல் வந்து
ரவுன் அடிச்சா
பட்டாசு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

## நகைச்சுவைப் பாடல்கள்

கிராமியப் பாடல்களில் நகைச்சுவை ததும்பியிருந்ததை கிராமியப் பாடல்களைப் படிக்கின்றபோது காணலாம். அப்படியான பாடல்களைப் பாடி மகிழ்கின்றபோது சிறுவர் களின் முகத்தில் சந்தோஷம் நிறைந்து போயிருப்பதைக் காணலாம்.

பல்வேறு தருணங்களில் சிறுவர்கள் தமக்கென ஒரு வட்டத்தை அமைத்துச் செயற்படுவார்கள். அதுவே அவர்களது உலகமாகும். அது தனித்துவங்களாலும், சந்தோஷங்களாலும் அலங்கரிக்கப்பட்டவை.

- நகைச் சுவையாகப் பாடும் சிறுவர் பாடல்

*சீத்தா அப்பம் தா*
*பேபி ரோசா லல்லல்லா*
*பூப் பூ புளியம் பூ*
*ஒன்றைக் கொத்து தாழம் பூ*
*அடிக்கலாம் பிடிக்கலாம்*
*அப்பாவுக்கும் கொடுக்கலாம்*
*சாச்சி வந்தாளாம்*
*சவுக்கால அடித்தாளாம்!*

- மாட்டுக்கு தன் பெயரை குறி வைத்து விளையாடும் பாடல்

*ஆட்டுப்பட்டி மாட்டுப்பட்டி*
*வாப்பா தந்த கன்றுக்குட்டி*
*குறியை பார்த்து கொள்ளுங்க*
*கண்ணை மூடிக் கொள்ளுங்க*
*என்ன பேரு சொல்லுங்க*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06**

# கிராமத்துச் சந்தைப் பாடல்கள்



சந்தை என்பது மக்கள் கூடுகின்ற இடமாகும். இது அங்காடி, அல்லங்காடி என இரண்டு பிரிவுகளாகக் காணப்பட்டது. அங்காடி என்பது பகலில் கூடும் சந்தையாகவும், அல்லங்காடி என்பது இரவில் கூடும் சந்தையாகவும் விளங்கியது. கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்காகவும், தமக்குத் தேவையான பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வ தற்காகவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்புத்தான் சந்தை.

கிராமத்தவர்கள் தமது மாட்டு வண்டிகளில் சந்தைக்குச் செல்வதுண்டு. அவ்வாறு மாட்டு வண்டியில் சந்தைக்குச் செல்லும் மச்சானிடம் தன்னையும் சந்தைக்கு அழைத்துச் செல்லும்படி அவனுடைய மாமியின் மகள் வேண்டுகோள் விடுக்கிறாள். அந்த வேண்டுகோளினை மையமாகக் கொண்டே பின்வரும் பாடல் அமையப்பெற்றுள்ளது.

### தனியே விட்டுச் செல்லாதே !

*ஒத்தயாக போற மச்சான்*
*குத்துக்கல்லா நானிருச்சன்*
*என்னை கூட்டிச் செல்ல*
*மறக்காதே!*



ஏ.எம். கஸ்புள்ளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிவிற்கும் சந்தையிலே
கூட்டத்தோடு கூட்டமாக - என்னைத்
தனியே விட்டுச் செல்லாதே - என்னைத்
தனியே விட்டுச் செல்லாதே!

☯ சந்தையில் காணப்படுகின்ற பல விதமான பொருட்களில் அத்தியவசியப் பொருட்கள் தவிர, ஒரு சிலவற்றின் மீதே அதீத விருப்பம் இருக்கும் சந்தையில் காணப்படுகின்ற பொருட்களில் தனக்கு விருப்பமான பொருட்களை ஒரு பெண் தனது கணவனிடம் வாங்கிக் கேட்பதைப் பின்வரும் பாடல் சுட்டி நிற்கிறது.

**நல்லதாக வாங்குங்க**

கைகளுக்கு வளையல்
காலுக்கு கொளுசு
விரலுக்கு மோதிரம்
நல்லதாக வாங்குங்க
மச்சானே!

காதுப்பூ இல்லாம - என்
முகச்சிரிப்பும் போயிடுச்சி
சந்தையிலே நடந்து நடந்து
செருப்பும் அறுந்திடுச்சி - அதனாலே
வெறுப்பும் வந்திடுச்சி
நெருப்பாக விழும் வெயிலு கூட
கூடவொரு கொடையும் வாங்கிடுங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ சந்தையில் மாம்பழம் விற்கும் வியாபாரியொருவர் தனது மாம்பழங்களை விற்கும் போது கூவி அழைப்பதையும், பொருளின் தன்மை எவ்வாறானது என்பதையும் விளக்கி நிற்பதே இப்பாடலாகும்.

**வாருங்க வாங்குங்க**

கறுத்த கொழும்பான்
விளையாட்டு கிளிச்சொண்டு
பெருத்த பெருத்த மாம்பழங்கள்
பேரைச் சொல்லிக் கேளுங்க
பழுதில்லா பழங்களுங்க
இனிப்புக்கு குறைவில்லங்க
ருசியோ ருசி
வாருங்க வாங்குங்க
மாம்பழம் மாம்பழம்!

**மனசுக்கு ஏற்ற விலை**

முக்கனிகள் இருக்கிறதே
எக்கனிகள் வேண்டுமம்மா
இக்கனிகள் சுவையைத்தான்
தொண்டு தொட்டுத் தெரியுமம்மா!
மனசுக்கு ஏத்தவெல
குறிச்சிருக்கேன்
வாங்கம்மா வாங்கம்மா
வாங்கிக் கொண்டு போங்கம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

# தாலாட்டுப் பாடல்கள் மற்றும் குழந்தைப் பாடல்கள்



கிராமப்புறங்களில் ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் தொழிலுக்காகச் செல்வது வழமையாகும். அவ்வாறு தொழிலுக்குச் செல்கின்ற பெண்களில் பலர் தமது கைக்குழந்தைகளையும் கொண்டு செல்வர். அப்படி தொழிலுக்குச் செல்கின்ற பெண்கள் வேளாண்மை நிலங்களில் நாற்று நடல், நெற்கதிர் பொறுக்குதல், நெற்கதிர் தூக்குதல்,நெற்கதிர் தூற்றுதுல் போன்ற வேலைகளையும் இன்னும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில வேலைகளையும் செய்வார்கள்.

இப்படியான தருணங்களில் வேலை செய்யுமிடத்தில் உள்ள மரக்கிளைகளில் தொட்டில் கட்டி, குழந்தைகளை தொட்டிலில் உறங்கச் செய்து விட்டு தமது வேலைகளில் கவனம் செலுத்துவார்கள். குழந்தைகள் தொட்டிலில் இயற்கைக் காற்றுடன் இனிமையான உறக்கத்தில் ஆழ்ந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தை திடீரென விழித்துக் கொண்டு அழத் தொடங்கினால் தாய் தனது குழந்தையை அள்ளியணைத்து குழந்தைக்குப் பாலூட்டுவாள். பாலைக் குடித்த குழந்தையும் மகிழ்ச்சியுடன் இருக்கும். அவ்வாறு குழந்தை அழுகின்ற போது குழந்தையின் அழுகைச் சத்தத்தை நிறுத்த தாய்மார்கள் பல்வேறு பாடல்களைப் பாடி குழந்தையைத் தாலாட்டுவதும் உண்டு.

அப்படி அழுது புலம்புகின்ற குழந்தையின் கண்ணீரை நிறுத்துவதற்காகப் பாடப்படுகின்ற பாடலாகவே பின்வரும் பாடலும் அமைந்துள்ளது.

### கண்ணெதிரே நீ உறங்கு

*பால் தர மறந்ததாலோ*
*பசியெடுத்து அழுகிறாயோ?*
*செய்யும் தொழிலாலே*
*சேயை மறந்தேனோ?*

*அழாதே என் செல்லம்*
*அம்மா வந்திட்டேன்*
*பசிக்கு பால் தருவேன்*
*படுத்துறங்கு என் ரத்தமே*

*தொந்தரவு செய்வாரில்லை மகனே - மரத்*
*தொட்டிலிலே நீ உறங்கு - என்*
*கண்ணெதிரே நீ உறங்கு*
*ஆரிரோ ஆராரோ!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலியை ஒத்தவனே

வானத்து நிலவாக
என் வயிற்றில் வந்துதித்த
என் மகனே
ஆராரோ ஆரிராரோ!

பத்து மாதங்களும்
பத்திரமாய் தாங்கிருந்தேன்
இத்தரையில் நீ பிறந்து
இன்பம் தந்தாயே
ஆராரோ ஆரிராரோ!

அழாமல் நீ இருக்கவும்
எழாமல் நீ கண்ணுறங்கவும்
அன்புத் தங்கமே உனக்காய்
ஆராரோ பாடிடுவேனே
ஆராரோ ஆரிராரோ!

அழகாய் பிறந்தவனே
அம்புலியை ஒத்தவனே
நெஞ்சினிலே நிறைந்தவனே
நித்தமும் இனிப்பவனே
ஆராரோ ஆரிராரோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழந்தைகளின் நடக்கும் பருவ பாடல்கள்.

பிள்ளைகள் நடக்கப் பழகும் பருவங்கள் பெற்றோருக்கும் மற்ற உறவுகளுக்கும் பார்ப்பதற்கு இனிமையான காட்சியாகும். பத்து மாதம் சுமந்து தனது மடியில் வைத்துத் தாலாட்டிய தாயின் மடியில் இருந்து எழுந்து உலகத்தில் நடை பயிலத் துவங்கியிருக்கும் பிள்ளையைப் பார்த்து எந்தத் தாய்தான் பூரிப்படைந்து போக மாட்டாள்.

ஒரு தாய் தனது குழந்தை நடக்கின்ற போது, எழுகின்ற ஆனந்தத்தையும், தனது பிள்ளை நடை பயில்கின்ற போது அவள் வழங்குகின்ற ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பின்வரும் பாடல் குறித்து நிற்கின்றது.

***நடந்து வா***

*தத்தி தத்தி நடந்து வா*
*தங்க மகனே நடந்து வா*
*முத்து பல்லனே நடந்து வா*
*குலத்தின் ஒளியே நடந்து வா*

*சின்னப் பாதங்கள் வைத்து வா*
*சிரித்து நீயும் நடந்து வா*
*கண்ணின் மணியே நடந்து வா*
*காலை மாலை நடந்து வா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையில் நனையாதே!

பேஞ்ச மழையெல்லாம்
ஒன்ற தலயில
தலைய துவட்டிட வா மகனே
ஜொரம் வந்தா தாங்க மாட்டா
ஓடி வா தங்கமே
தண்ணீயில விளையாடாதே
சேற்றுப் புழு கடித்துவிடும்
சொன்ன சொல்லு கேட்பாயா
நான் பெத்த ராசாவே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08


## வயல் பாடல்கள்

கிராம மக்களின் பிரதான தொழில் விவசாயமேயாகும். இதனால் விவசாயத் தொழிலை மேற்கொண்ட மக்கள் விவசாய நிலங்களை அண்டிய பிரதேசங்களிலேயே தமது வாழ்விடங்களை அமைத்து வாழ்ந்தனர். இதுவே ஆரம்ப காலங்களில் மருதம் எனவும் அழைக்கப்பட்டது.

வயலில் உழுதல் வேலைகளைச் செய்தல், நாற்று நடுதல், நாற்று மணிகளை விதைத்தல், களைகளை அகற்றல், செழிப்பான வளர்ச்சிக்காகவும் பசளையிடல் மற்றும் குறிப்பிட்ட காலத்தில் நெற்கதிர்களை அறுவடை செய்தல் அவற்றைப் பதப்படுத்தி எடுத்தல் போன்ற வேலைப்பாடுகள் வேளாண்மை செய்பவர்களின் தொழிலில் காணப்பட்ட முக்கிய கூறுகளாகும்.

இவ்வாறு தொழிலில் காலத்தை செலவளிக்கும் விவசாயி கள் தமது தொழில் ஈடுபாடுகளின் போது உணர்வுக் களிப்புக்காகவும், பொழுது போக்குக்காகவும் பாடல்களைப் பாடி மகிழ்வதுண்டு. தொழில் ரீதியான செயற்பாடுகளை மையப் படுத்தி இப்பாடல்கள் பாடப்பட்டதால் இவை தொழிற் பாடல்கள் என அழைக்கப் பெற்றன. அவ்வாறு கிண்ணியா மண்ணிலே பாடப்பட்ட பாடலின் வடிவத்தினை கீழே காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வயல் உழுதல் பாடல்

உழுத நிலமிருக்கு
உழைக்க உடலிருக்கு
மழையை காணலயே!
நம் மனசு மாறலயோ

மழையை நம்பி
செய்யும் பயிரு
மாரி வந்தா
நல்ல பயிரு
மழையை வேண்டு இறைவனிடத்தே
மனசு வெப்பான் நம்மிடத்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☯ நாற்று நடும்போது பாடும் பாடல்

வயல்களில் வேலை செய்கின்ற விவசாயிகளில் ஆண், பெண் இருவரும் அடங்குவர். அவர்கள் வயலில் வேலை செய்கின்ற போது பல்வேறு வேலைகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

வயலில் நாற்றுக்களை சேற்று நிலத்தில் நடுகின்ற போது ஆணும், பெண்ணும் இணைந்து பாடுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறு ஆணும் பெண்ணும் இணைந்து பாடுகின்ற போது, குறித்த கிராமியப் பாடல்களில் சுவாரஷ்யமும் சேட்டைகளும் கலந்திருப்பதையும் காணலாம்.

**ஆண் :-** நாற்று நடுபவளே - நான்
நாடும் என்னவளே
பாட்டு ஒணணு நான் பாட - பதில்
பாட்டு பாடு புள்ள
என் பாட்டோடு
சேரு புள்ள !

**பெண் :-** மச்சான் பாட்டு கேட்கயில
மனசு பொங்கி வழியுது
வெட்கம் வந்து மூடுது
வெக்கித் தலை குனியுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேளாண்மையை வயலில் பதியமிட்ட பின்னர் அவை முளைத்து வரும். ஆனால் அவற்றை பிராணிகளிட மிருந்தும், பறவைகளிடமிருந்தும் சேதமேற்படாமல் பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகும். இதனால் காவலுக்காக ஒருவரை நியமிப்பதுண்டு. இவர்களே அப்போது ஆடவர்கள் என அழைக்கப்பட்டார்கள்.

அவ்வாறு வயலில் வேளாண்மையைக் காவல் காக்கின்ற போது தனது நிலையை வெளிப்படுத்தும் ஆடவனைப் பற்றியே இப்பாடல் அமைந்துள்ளது.

***காவல் காரன்***

*வெளஞ்ச பயிருக்கு*
*காவல் நான் தானே*
*விடிய விடிய விழிச்சிருப்பேன்*
*காட்டு மிருகம் வராமல் தடுத்திடுவேன்*
*குடில் தான் என் வீடு*
*நான் காவக்காரன்*
*வெளஞ்ச பயிரே என் தோழன்*

- வயல் வெளிகளில் வேளாண்மையை அறுவடை செய்யும் போது பாடப்படுகின்ற பாடல்கள் 'அறுவடைப் பாடல்கள்' என அழைக்கப்படுகின்றது. அவ்வாறு அறுவடைகளை மேற்கொள்கின்ற போது பாடப்படுகின்ற பாடல்.

***அருவடைப் பாடல்கள்***

*அருவா கத்தியோடு - அவ*
*தருவா வெத்திலய*
*கொஞ்சம் போட்டுக்கிட்டா*
*வெட்டு தொடங்குமுங்க*
*இனி நெல் கட்டுத் தூக்கணுமுங்க!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விவசாயத்தை தொழிலாகச் செய்கின்ற ஒரு விவசாயியின் பின்னால் ஒளிந்துள்ள துயரங்களும், வியர்வைகளும் அபரிதமானவை. அவை எம்மில் பலருக்கு விளங்குவதில்லை. அவற்றின் மகிமையை வெளிப்படுத்தும் வகையிலேயே பின்வரும் பாடல் அமையப் பெற்றுள்ளது.

**உழவனே புறப்படு**

விடியும் பொழுதிலே
விலகிடும் இருளிலே
உழவனே புறப்படு
பூமியை உழுது - இந்த
உலகிற்கு உணவளிப்போம்
உழவனே புறப்படு!

- பசியோடு வேலை செய்வது எவருக்கும் கஷ்டமானது அதனால் பால் கறந்து தருவேன் காய்ச்சி தருவாயா? என தன் மாமி மகளிடம் கேட்பதாக அமைந்த பாடல்

**பால் தருவாயா?**

*சுரந்து நிற்கும்*
*பால் மடியில்*
*கறந்து பால் தந்திடவா*
*காய்ச்சி கொஞ்சம் தருவாயா?*

*மச்சான் வேல செய்யணுமே*
*மாடு கட்டி உழுதணுமே*
*பாடு பட்டா வாழ்வுண்டு*
*பழமொழிகள் பல உண்டு*
*மச்சான் சொன்னத புரிஞ்சாயா*
*காய்ச்சிய பால கொண்டு*
*தருவாயோ?*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

## சோகப் பாடல்கள்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் ஆகும். அவ்வாறான சூழலைக் கொண்ட கிராமமாகவே கிண்ணியா கடலும், கடல் சார்ந்த பிரதேசமும் காணப்படுகிறது. அப்பிரதேசத்தில் 'கன்னா மரம்' என அழைக்கப்படுகின்ற கடற்தாவரம் உள்ளது. அத்தாவரம் நிழல் தரக் கூடிய மரமாகவும், கடலரிப்பைத் தடுக்கக் கூடிய வல்லமையும் கொண்டதாகும்.

மீனவர்கள் அம்மரத்திற்கு கீழ் அமர்ந்திருந்து தங்களது மீன்பிடி வலையின் அறுந்த பகுதிகளை நூல்களைக் கொண்டு பின்னுவார்கள். வேறு சிலர் அங்கு வீசும் காற்றை வாங்கியவாறு நித்திரை கொள்வார்கள்.

மீன்பிடி வலை பின்னப் போன தனது கணவன் இன்னும் வீடு வந்து சேரவில்லை என்று புலம்புவதாக குறித்த பாடல் அமைந்துள்ளது.

### என்னாச்சி தெரியலயே

*கன்னா மரத்தடிக்கு*
*காலையிலே போன மச்சான்*
*இருட்டாகிப் போனதுவே*
*இன்னும் வரலையே!*

*கன்னா மரத்தடியே*
*கதியென்று கிடக்காரோ*
*என் நெனப்பு வரலையோ*
*என்னாச்சி தெரியலயே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ வாழக்கையின் உண்மை நிலையையும் அதன் கடைசி முடிவையும் இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது.

**உறவுமில்ல உசிருமில்ல**

உச்சி வெயிலு புள்ள
கண்ண மறக்குதடி
ஒன்னும் வௌங்கலய ஒன்ன
நெனச்சிக்கிட்டு
உள்ளே வந்திருக்கேன்
உன் கையால
உள்ளம் குளிர்ந்திடவே
குளிரு தண்ணி
தாடி புள்ள!

கோட வெயிலு போயி
மாரி வந்தாலும்
வயிற்ற நிரப்பத்தான்
ஓட்டம் கூடிடிச்சே
கொஞ்ச காலம்தானே
இந்த வாழ்க்கை புள்ள
மண்ணுக்குள்ளே போன பின்பு
உறவுமில்ல உசிருமில்ல!

☯ மழைக்கால தருணத்தில் மழை கடுமையாகப் பொழிந்து கொண்டிருந்த போது, குடை பிடித்துக் கொண்டு வந்த வயதான பாட்டியொருவரின் குடை பலமான காற்றுக்கு கட்டுப்படுத்தப்பட முடியாமல் முறிந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடை முறிந்ததால் மிகவும் கவலையடைந்த பாட்டி தனது மனோநிலையை வெளிப்படுத்தும் விதமாகக் குறித்த பாடல் அமைந்துள்ளது.

### பாட்டியின் புலம்பல்

*கொட்டும் மழைக்காக*
*கொட பிடிச்சன்*
*பொட்டுன்னு போயிடுச்சே*
*பொட்டுன்னு போயிடுச்சே*
*பத்திரமா வெச்சிருந்தும்*
*பாதி பாதியாகிடுச்சே*
*இதுபோல வாங்கிட்டவே*
*பத்து காசு சேர்ப்பதற்குள்*
*இந்த பாட்டி கதை முடிஞ்சிடுமோ?*

### காத்திடு வாய்

*பிள்ளைகளை பெற்றுப் போட்டேன்*
*பெற்றது மூனும் பெண்ணாச்சே*
*வளர்த்து எடுத்ததுல*
*பாதி நிலம் போயிடுச்சே*
*படிச்ச வெச்சதுலே*
*மீதி நிலம் போயிடுச்சே*

*ஒருத்தன் கையிலே பிடிச்சி*
*கொடுக்கும் வரை*
*எண்ட சீவன காத்திடு*
*வல்லோனே ரஹ்மானே*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## ஓதிப்பார்க்கும் பாடல்கள்

எல்லோருக்கும் உடலில் ஏதாவது நோய் இருந்து கொண்டே இருக்கிறது. அது இயற்கையின் நியதிகளில் ஒன்று. அவ்வாறு உடலில் மனிதனுக்கு நோவினையோ, தீங்குகளோ ஏற்படுமிடத்து பல்வேறு இன்னல்களுக்கு அவன் ஆளாகிறான். அதன் பொருட்டு பலர் பல்வேறு மருந்துகளை உட்கொள்வர். சிலர் அது கண்ணூறா கவோ அல்லது செய்வினையாகவோ இருக்கலாம் என்ற எண்ணம் கொண்டிருந்ததும் கூட அக்காலத்திலிருந்த வழக்கமாகும்.

அப்படி ஓதிய நீரை குடித்தல், உடம்பில் தடவுதல் போன்ற விடயங்களால் நோய்வாய்ப்பட்டவருடைய உடல் பூரண குணமடையும் என்ற நம்பிக்கையால் அவ்வாறு நோயுற்ற ஒருவருக்காக மௌலவியை அழைத்து தண்ணீர் ஓதுவதையும், அதை நோய்வாய்ப் பட்டவருக்கு வழங்குவதைப் பற்றியுமே பின்வரும் பாடல்கள் விளக்கி நிற்கின்றது.

### அவரு நல்லவரு

*தேதி பார்த்திருக்க வேண்டாம்*
*தேகம் மெலிஞ்சி போயிடுச்சே*
*ஓதிப் பார்க்க*
*நம்ம ஒஸ்தாதை கூப்பிடுங்க*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொத்திருக்கும் செய்த்தானை
ஓதி விரட்டிடுவாரு
அவரு நல்லவரு
அதிலே வல்லவரு!

தண்ணீரை ஓதிக் கழுவிட்டால்
தடிப்பு கொறஞ்சி விடும்
கண்ணியமான மௌலவியிடம்
கைபடாம கொண்டு போங்க

பாங்கிற்குப் பின்னால
தொழுத பின்னும்
ஓதித் தருவார்
தொடர்ந்து மூனு மொற
பாவிச்சா எந்தக் கொறயுமில்லங்க!

## ஆலிமை நாடுதல்

மகனுக்கு சுகமடைய
நேத்தி வெச்சிடுங்க
ஆலிமு அறிந்தவரு
அவரிடம் கேளுங்க
ஐந்து வக்துலயும்
நம்ம பள்ளியில தானிருப்பார்
போயி சந்தியுங்கோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## சந்தோஷத்தை வெளிப்படுத்தும் பாடல்கள்

கிராமபுற மக்கள் தொழில் நிமிர்த்தம் மாத்திரமன்றி பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தமது மனதில் தோன்றிய மன உணர்வுகளைப் பாடலாகப் பாடியுள்ளனர்.

அவை சந்தோஷம், கவலை, தொழில், பொழுதுபோக்கு என பல பரிமாணங்களில் விரிந்து செல்கின்றன.

☯ வேளாண்மை விளைச்சலால் ஏற்பட்ட சந்தோஷம்

*கதிர்களின் செழிப்புக்கு*
*கண்ணூரு போக்கணுமே*
*வெளஞ்சது நெல்லுமணி*
*நெறஞ்சது உள்ளமடி*
*கனவு கலஞ்சதடி*
*கஷ்டமும் இனி தீருமடி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ தொழில் கிடைத்ததால் ஏற்பட்ட சந்தோஷம்

வேல கிடச்சதால
வெளிச்சம் வந்திடிச்சி
நாளு செலவுக்கு
நம்ம பயன்
கிளாக்கு ஆனானே
படிச்ச வெச்சதிற்கு - மனசில
பால வார்த்தானே!

☯ மனைவி கர்ப்பம் அடைந்ததால் ஏற்பட்ட சந்தோஷம்

கச்சம்மா சின்னம்மா
எல்லாம் வாங்களேன்
மனைவி உண்டாயிருக்கும்
சேதி கொஞ்சம் கேளுங்களேன்
நான் தந்தையாகப் போறேன்
சுந்தோஷத்தைப் பாருங்களேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12
## ஒப்பாரிப் பாடல்கள்

கிராமப்புறங்களில் கணவன்மார் தொழில் நிமிர்த்தம் வெளியில் செல்வது வழமையான விடயமாகும். ஆனால் கணவன் வெளியில் சென்று உரிய நேரத்திற்கு வீடு திரும்பவில்லையாயின் மனைவி பதைபதைத்துப் போகின்ற தருணங்கள் அதிகமாகும்.

சில வேலைகளில் வெளியில் சென்ற கணவன் வீட்டை விட்டு வெளியில் சென்றால் வீடு திரும்புவதற்கு இரண்டு, மூன்று நாட்கள் கூட செல்லலாம். கணவன் இன்று வருவார் அல்லது நாளை வருவார் என்ற எண்ணத்தில் மனைவி தனது புலம்பலை வெளியிடுவதும் உண்டு.

காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற கணவன், காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக மிருகங்களின் தாக்குதலுக்கு உற்படுத்தப்பட்டு இறந்து போனதைக் கேள்வியுற்ற இறந்தவனின் மனைவி ஒப்பாரி வைத்துப் பாடுவதாக பின்வரும் பாடல் அமையப் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன செய்வேன்

வெறகு எடுக்கப் போனவரு
வீடு வந்து சேரலயே
இரவு நேரமாயிடுச்சே
இவர இன்னும் காணலயே!
உறவு பொடியன் ஒருத்தன்
வந்த பொறவு பார்த்து வர
அந்த இரவே
சொல்லி விட்டேன்!

விடியும் பொழுதாடுயிச்சே
வீதியில் கூட்டம் என்னாயிடுச்சோ
அடியே எந்தன் கணவரு
அமைதியானாரே என்டல்லாவே
என்ன செய்வேன்?

காட்டு மிருகம் அடிச்சதாலோ
கன்னி வாழ்வாயிடுச்சே
எண்ணியிதை வாழயில
என்ட உசிரும் போயிடுமே!

காக்கும் இறைவனே என்
கெதி பார்த்தாய் - இனி
யாருக்காக நான் வாழ்வேன்
யாவும் வெறுத்துப் போனேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13

## உள்ளத்தின் விருப்புக்களை வெளிப்படுத்தும் காதல் பாடல்கள்

கிராம மக்களிடையே காதல் என்பது போற்றத்தக்க ஒன்றாகவும், தூய்மையான ஒன்றாகவும் இருந்தது. தலைவன் மீது காதல் கொண்ட தலைவி அல்லது தலைவி மீது காதல் கொண்ட தலைவன் தமது காதலை வெளிப்படுத்த ஏதுவான சூழல் அப்போது காணப்பட்டது.

தமது உள்ளத்தின் விருப்பு வெறுப்புக்களை வெளிப் படையாகவே தெரிவிக்கும் சூழலில் வாய்க்கப் பெற்ற இவர்கள் தமது காதலை வெளிப்படுத்தும் விதமாகவும் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. எனவே எதையுமே வெளிப்படையாக பேச ஏதுவான சூழல் காணப்பட்டதை தெளிவாக எம்மால் விளங்கிக் கொள்ள முடியும்.

அப்படியான கள்ளம் கபடமற்ற வாழ்க்கை நிலையை இன்றைய நகர்ப்புற வாழ்வில் கண்டு கொள்ள முடியாத நிலை உள்ளது. அப்படியான சாத்தியச் சூழல் மிக மிக அரிதான ஒன்றாகவே இப்போதும் உள்ளது.

அவ்வாறு கிராமத்தில் காதல் வயப்பட்டவர்களில் நிலையை பின்வரும் பாடலில் வெளிப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☯ தன் காதலை மறந்த காதலிக்கு பழைய விடங்களைச் சொல்லி காதல் உணர்வுகளை ஏற்படுத்தும் பாடல்.

**உள்ளம் மறந்திடிச்சோ**

வான் நிலவோடு பேசிக்கிட்டு
வாழ்ந்த பொழுத நெனக்கயில
தேனாக இனிக்குதடி - அந்த
தேத்த மர ஊஞ்சலடி!

பன மரத்து மட்டையெல்லாம்
பலகாலம் விறகாக்கி
பலகாரம் சுட்டுத்திண்ட
கண்டக்காடும் மறந்திடிச்சோ?

தூக்கத்தை விட்டுப்போட்டு
தூண்டிலிலே மீன் பிடிச்சி
ஆக்கியுண்டோம் மச்சாளே
ஆத்தங்கரயும் மறந்திடிச்சோ?

கண்ணைக் கட்டி விட்டு
கால்சட்ட பருவத்தில
ஓடி ஒளிந்து கொண்ட
ஓடைகளும் மறந்திடிச்சோ?

சின்ன வயசில
உன்ன சுமந்து கொண்டு
ஊரைச் சுற்றி வந்தேன் - உன்
உள்ளம் என்னை மறந்திடிச்சோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காதலை வெளிப்படுத்துவதில் பெண்களை விடவும் ஆண்கள் முந்திக் கொள்வதுண்டு. அதனை பின்வரும் பாடல்கள் எடுத்துக் காட்டு கின்றது.

**என்னைப் புரிந்திடு**

நிலவப் போல
வந்து போறவளே
வெளியே கொஞ்சம்
வாடி புள்ள
நெஞ்சம் கொண்ட
காதலைத்தான்
நெஞ்சி நிமிர்த்தி
கேளு புள்ள

உன் நெனப்பினிலே
என் வாழ்விருக்கு
நீ விட்டுப்போனா சாவிருக்கு
புரிஞ்சி கொஞ்சம் நடபுள்ள!

- இருவருக்குள் ஏற்பட்ட வாக்குவாதம் காதலாக மாறுகிறது

**காதல் சண்டை**

மருதாணி கையால
மத்தளம் கொட்டும் பெண்ணே
தெரியாம சொல்லிப்புட்டன்
கோபத்தை விட்டுவிடு
மத்தளம் கொட்டிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சொன்னா கேட்கணுமா
வேலைக்காரியா ஆகணுமா?
வீட்டுக்காரியா ஆக்கிவிடு
விருப்பம் எதுவோ செய்திடுவேன்

காலம் ஒன்னு கனியட்டுமே
வேல ஒன்னு கிடச்சட்டுமே
உனக்கும் எனக்கும்
டும் டும் டும்தான்
விடிய விடிய மத்தளம் தான்!

☯ ஆண், பெண் பாடல்கள்

**பெண் :-** கள்ளி மேடு போற மச்சான்
நானும் கூட வந்திடவா
களத்து மேடு போகனுமே
காத்து கறுப்ப நினக்கயில
இந்த கன்னி நெஞ்சு
நடுங்குறதே!
தள்ளித் தள்ளி போறிகளே
தாவிப் பிடிச்ச மாட்டெனுங்க
வார்த்தை நாணயம்
காப்பேனுங்க அருகே
கொஞ்சம் வந்திடுங்க!

**ஆண் :-** சுமையோடு நடப்பதால
எட்டுக் கொஞ்சம்
தள்ளிப் போனேன்
கட்டு மரம் பாரமாச்சே!
தாவிப் பிடிக்கும்
கதைய விடு
காதலிருந்தால் சொல்லி விடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கதை கேளு

வண்ண உடை உடுத்தி
மாட்டு வண்டியிலே போற மச்சானே
என்னை நெனக்கலையோ
உன் கவனம் எங்கேயோ
திசை மாறிடிச்சோ

சின்னப் பருவத்திலே
எனக்கு நீ என்று
உந்தன் பெயரைச் சொல்லி
பெரியோர் சொல்லி வைத்தார்

அந்தப் பருவம் முதல் உன்
மீது ஆசை வெச்சேன்
ஊரு சனம் கேட்டுப் பாரு
மனசெல்லாம் நீ இருக்க

வண்டிச் சத்தத்திலே இந்த
வஞ்சி சொல்வது கேக்கலையோ
கொஞ்சம் நின்றிருந்து மச்சானே
என் கதையை கேப்பாயோ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14
## சேனைப் பாடல்கள்

கிராமத்திலே காடுகளை வெட்டி பண்படுத்தி சேனைப்பயிர் செய்கைக்காக ஏற்ற நிலமாக அதனை மக்கள் உருவாக்கி சேனைப் பயிர் செய்கையை மேற்கொள்வர். சேனை வாழ்க்கை சுவை மிகுந்தவையாகும். கிடப்பதைக் கொண்டு திருப்தியான வாழ்க்கையை அந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறான மக்களுக்கு நில புலங்கள் பல சொந்தமாக இருக்கும் அவ்வாறு இரண்டு காணிகள் தம் இருவருக்கும் இருப்பதாக பின்வரும் பாடல் மூலம் வெளிப்படுத்தப் படுகிறது.

கொள்ளஞ் சேனையில
ரெண்டு கொய்யா மரம்
அந்த கொய்யாமரத்தில
ரெண்டு கனிகள்
ஒன்னு தஸ்தகீரும்
ஒன்னு முத்தலிபும்
ஒன்னாக வாழ்ந்திடவே!

*தன் ஆசைக்குரிய மச்சான் சேனையில வாழ்க்கை காலத்தைக் கழித்த வண்ணமாக உள்ளார். அவரைக்காண வீட்டுக்கு வருமாறு பல வழிகள் சொல்லி பாடும் பாடல் பின் வருமாறு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கு வாங்க மச்சான்

சேனையில குடிசை கட்டி
தனியாக நானிருக்கேன்
செவத்த பொண்ணு நீ வந்தா
சொகமாக இருந்திடுவேன்!

என்னோட இரக்கமென்டால்
வீட்ட வா மச்சான்
குளுந்த தண்ணீர் தருவேன்
படுக்க பாய் தருவேன்!

படுத்துறங்க மார் தருவேன்
கொஞ்ச முகம் தருவேன்
தேனான பானம் உனக்காய்
தேக்கி வெச்சிருக்கேன்!

ஆராயம் வெள்ளி
அசரால் திரும்பும் மட்டும்
உனக்காக பார்த்திருப்பேன்
ஊருசனம் பார்த்து வாங்க மச்சான்!

சுத்தி வர வேலி
சூழவெங்கும் முள்வேலி
எங்கும் ஒரே வேலி
எப்படி உன்னிடம் வருவதோ? மச்சினியே
வடக்குப் பக்கம்
வாழைப் பத்தி ஓரத்தில
திறப்பு சொருகிருக்கு
வெளக்குப் பத்தும் வெளிச்சத்தில
மச்சானே வந்திடுங்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோளப் பாடல்

சோளம் கச்சான் எல்லாம்
கச்சிதமாய் வெளஞ்சிடுச்சி
மச்சான் மனசு போல
பணமும் நெறஞ்சிடுச்சி

காலத்துக்கு ஏத்த பயிரு
கண்படாம பாத்துக்குங்க

## சோளம் முறிக்கும் பாடல்

சேனையிலே குடிசை கட்டி
சொந்தங்களை கூட்டிக் கொண்டு
பொழுது சாயும் நேரம்
வெளஞ்ச சோளக் கதிர முறிச்சி

கிடைத்த விறகெல்லாம்
கொண்டு சேர்த்து
கல்லை எடுத்து
அடுப்பு மூட்டி

அவிஞ்ச பின்னே
ஆளுக் கொரு கதிரை
ருசித்து ருசித்து
உண்ணலாமே

உண்ண உண்ண
அலுப்பு இல்ல
இன்னும் வேணுமா
எடுங்க புள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லா வருகுது

நல்லா வருது
நல்லா வருது
நம்ம சேனை பயிரு
அணைக்கட்டு தண்ணீர
அள்ளி வளர்த்த பயிரு

கோட வந்தாலும்
வாட வில்ல
மாரி வந்தாலும்
பயிரு சேதமில்ல

வாப்பா வழித் தொழிலு
வாடா தம்பி ஜலீலு
பசியை நினைத்து உழைப்போம்
பிறர் பசியைப் போக்க கொடுப்போம்

நல்லா வருது
நல்லா வருது
நம்ம சேனை பயிரு
அணைக்கட்டு தண்ணீர
அள்ளி வளர்த்த பயிரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

## ஊர் பழமொழிகள்

எமதூரில் பேச்சுவழக்கில் உள்ள பழமொழிகளைத் தேடி தொகுத்துள்ளேன். இவ்வாறான பழமொழிகள் நமது நாட்டில் வேறு இடங்களிலும் பேசப்படுவதை நாம் அறியலாம்.

- எருமை மாட்டில் மழை பெய்கிறது போல
- வைக்கோலில் படுத்த நாய் போல
- வந்தான் மஸ்தான் போனான் சுல்த்தான்
- ஊர் மக்கள் கிடக்கு கொசவம் ஓடு கிடக்கு
- பெருமைக்கு மாவு இடித்தல்
- எல்லு எண்ணெய்க்கு காயுது எலி புழுக்கை என்னத்துக்கு காயுதாம்
- அஞ்சி சதத்துக்கு அப்பமும் வேணுமாம் கரையும் பெரிசா இருக்கணுமாம்
- முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறச்சிச்சாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடல் வத்தி கருவாடு தின்னனும்டு நெனச்சி கொடல் வத்தி கொக்கு செத்திச்சாம்
- முக்கி முக்கி பாடுபட்டவனுக்கு மூனு கொளுக்கொட்டையாம் எட்டி எட்டிப் பார்த்தவனுக்கு எட்டு கொளுக்கொட்டையாம்
- மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிப் போடாதே!
- குளவிக் கூட்டுக்குள்ளே இருந்தாலும் கிளவிக் கூட்டுக் குள்ளே இருக்கலாது
- வாய் இருந்தால் வங்காளம் போகலாம்
- வெளியே அலங்காரம் உள்ளே ஓங்காலம்
- மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல
- மீன் பட்ட கரையானுக்கு கண் கடை தெரியாது
- ஆடு அறுக்க முதல் புடுக்கை அறுக்கப் படாது
- குரைக்கிற நாய் கடிக்காது
- ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆற பொறுக்கலாகாதா?
- பழுத்த ஓலை விழ குருத்தோலை சிரிக்கும்
- அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்
- சோத்திற்கு முந்திக் கொள்ளணும் கூத்திற்கு பிந்திக் கொள்ளணும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளங்களை ஈர்க்கும்

கட்டையாறு வீதி கிண்ணியா - 02 எனும் முகவரியில் வசிக்கும் கவிஞர் ஏ.எம். கஸ்புள்ளாவாகிய இவர் பன்முக ஆளுமைகள் நிறைந்த ஓர் இலக்கியப் படைப்பாளியாவார். தற்போது இவரது கவனம் கிராமிய இலக்கியத்தின் பக்கம் திரும்பியுள்ளது குறித்து நான் ஒரு கிராமியக் கவிஞன் என்ற வகையில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கிராமத்தின் வாழ்வியலை இந்நூல் மூலம் எடுத்துக்கூறி நம் அனைவரையும் அதன்பால் இக்கவிஞர் ஈர்த்துள்ளார்.

இத்தகையதொரு நல்ல முயற்சியை தொடங்கியிருக்கின்ற கஸ்புள்ளாவின் பணிகள் சிறக்க எனது வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகும்.

P.T. அஸீஸ்
இலக்கிய வித்தகர்

ISBN 978-955-4840-02-7

விலை: 250/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org